# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/35 - 2018 ජනවාරි මස 05 වැනි සිකුරාදා - 2018.01.05

2052/35 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தலொன்றின்போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை**

*2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8) ஆம் உட்பிரிவுக்கு அமைய வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்க நெறிக்கோவை தேர்தலொன்றிற்கான பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலத்திற்கு செல்லுபடியாகும்.*

*தேர்தல்கள் சட்டத்திற்கமைய அரசயில் கட்சிகள் அங்கீகரிக்கப்பட முன்னரும்கூட இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டனவென்பதோடு, இவை தொடர்பான வரலாறு 1931 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் தொடர்பான சட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமகால சமூகத்தின் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை அர்த்தமுள்ளவையாகவும் விளைபயன்மிக்கவையாகவும் மாற்றுவதற்கு சட்ட விதிகளினூடாக மேற்கொள்ள முடிந்த செயற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையால் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான சிறந்த நிலைமையொன்றைப் பேணிக் கொள்வதன் பாரிய பொறுப்பு அரசியற் கட்சிகளுக்கே சுமத்தப்படுகின்றது.*

*அப்பொறுப்பை கருத்திலெடுத்து 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை நோக்காகக்கொண்டு இவ்வொழுக்க நெறிக்கோவை முதன் முதலாக தேர்தல்கள் திணைக்களத்தினால் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கெனப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்ட தேர்தல்களின்போதும் இவ்வொழுக்க நெறிக்கோவையில் காட்டப்பட்டுள்ள விடயங்களை ஒத்ததாக தயாரிக்கப்பட்ட ஒழுக்க நெறிக்கோவைக்கு கட்சிச் செயலாளர்களின் இணக்கப்பாடும் மற்றும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்கான அரசியற் கட்சி முகவர்களின் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.*

*தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்க நெறிக்கோவை அனைத்து தேர்தல்களிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முதன்மைப் பதவி தாங்குநர்களுக்கும், மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அனைத்து அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கும், வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும், அவற்றின் வேட்பாளர்களுக்கும் ஏற்புடையதாகுமென்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.*


1A - PG 3872 — 157 (2018/01)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஆதலால், இதில் காட்டப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளுக்கு இணங்க செயற்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

***(அ) சட்ட ஆட்சி :***

1. இலங்கை அரசியல் அமைப்பினாலும் ஏனைய நியதிச் சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில், தேர்தல் சட்டங்களுக்கமைய மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தல்களில் அல்லது மக்கள் தீர்ப்புக்களில் வாக்காளருக்கு சுதந்திரமாகவும் எவ்வித வலுக்கட்டாயமின்றியும் தமது வாக்கினை அளிப்பதற்கு அவகாசமளித்தலும் அதற்குத் தேவையான உதவிகளையும் வலுவூக்கங்களையும் அளித்தலும்.

2. தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையில் உரித்தாக்கப்பட்டுள்ள சம உரிமையை அனைத்து கட்டங்களிலும் பாதுகாத்தல்.

3. அனைத்து அரசியற் கட்சிகள், வேட்பாளர்களுக்கு உரித்தான உரிமைகளுக்கும், வாக்காளர்களை அறிவூட்டுவதற்கெனவுள்ள உரிமைக்கும் மதிப்பளிப்பதோடு, எதிர்த்தரப்பினருக்கு அவர்களின் கருத்தைக் கொண்டிருப்பதற்கும் அதற்காக சட்ட ரீதியாக பிரச்சார நடவடிக்கைகள்/ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குள்ள உரிமையையும் பாதுகாத்தல்.

4. இலங்கையின் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள அரச, அரச சார்பான, தனியார் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்விதத்திலான தடங்கல்களையோ அழுத்தங்களையோ ஏற்படுத்தாமை.

5. நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கின்ற நியதிச்சட்டப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் அவை பொறுப்புவிக்கப்பட்டுள்ளவர்களுக்குமுரிய கடமைகளை ஆற்றுகையில் தடங்கல்கள் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாமை.

6. பொது மக்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறு ஏற்படுத்தாமலும் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் மீறப்படாமலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.

7. அனைத்து தேர்தல்கள் தொடர்பான நியதிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் (பிரிவுகள்) தொடர்பாகவும் அனைத்து வேட்பாளர்களுக்கும் மற்றும் முதன்மை செயற்பாட்டாளர்களுக்கும் தெளிவைப் பெற்றுக்கொடுத்தலும் அச்சட்டங்களில் காட்டப்பட்டுள்ளவாறு தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அறிவுரை வழங்குதல்.

8. வாக்கெடுப்பு அல்லது வாக்கெண்ணலோடு தொடர்புடைய பொருட்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பவற்றை உரிய அலுவலரொருவரின் அனுமதியின்றி தொடுதல் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து வெளியில் எடுத்துச் செல்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல்.

***(ஆ) பொது நடத்தைகள் :***

1. இலங்கையர்கள் அனுஷ்டிக்கின்ற சமயங்கள், பேசுகின்ற மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் குலகோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக இனப்பிரிவொன்று அல்லது ஆட்களிடையே பகைமையுணர்ச்சி மற்றும் பொறுமையின்மை என்பவற்றை ஏற்படுத்தவல்ல அல்லது தூண்டவல்ல விதத்திலான நடத்தைகளைத் தவிர்த்தல் மற்றும் அவ்வாறான உணர்வு ஏற்படுத்தத்தக்க விதத்திலான கருத்துக்களை அல்லது விடயங்களை வெளியிடாதிருத்தல்.

2. அரசியல் கட்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள், அந்தந்த கட்சிகளின் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கடந்த கால நிகழ்வுகள் என்பவற்றிற்கு மட்டுப்படுத்த வேண்டுமென்பதோடு, எதிர்க்கட்சியினரின் அல்லது வேட்பாளர்களின் பொது நடவடிக்கைகளோடு தொடர்புபடாத, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்கங்களை விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளலும், நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், நிரூபிக்க முடியாத விடயங்கள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலான விமர்சனங்களை மேற்கொள்ளாதிருத்தலும்.

3. தேர்தலின் மூலம் நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்ற நியதிச்சட்ட நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதனூடாக இலங்கையர்களின் எதிர்கால அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணம் செய்யக்கூடிய வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து அவர்களை ஒழுக்க சீலத்துடனும் பக்குவத்துடனும் போட்டியிட வழிகாட்டல்.

4. அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் வேட்பாளர்களைப் போட்டியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்றபோது, அவர்களின் முந்திய செயற்பாடுகளின் நேரிய தன்மை, சட்டத்தை மதித்து செயலாற்றியமை, சட்டத்தின் முன்னால் குற்றச்சாட்டுகளுக்காளாகாமை, பொதுமக்கள் சேவைக்கான அர்ப்பணங்களை மேற்கொண்டள்ளமை, பணபலம் மற்றும் சமூக பலம் என்பவற்றைப் பயன்படுத்தி மக்கள் சமூகத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தாமை போன்ற குணநலன்களின் பால் கவனத்தை ஈர்க்க நடவடிக்கைகளை எடுத்தல்.

5. வேட்புமனுக்களைக் கையளிக்கின்றபோது அல்லது அதன் பின்னரான 30 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்துகைகளைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல்.

6. வாக்களிப்பு நிலைய வளவிற்குள் அல்லது வாக்கெண்ணல் நிலைய வளவிற்குள் புகைபிடித்தல் அல்லது மது அருந்திய நிலையில் வருவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென வேட்பாளர்கள்/ முகவர்கள் ஆகியோரை அறிவூட்டுதல்.

7. வேட்புமனுக் கையேற்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையம் அதன் சுற்றுச் சூழல் மற்றும் வாக்கெண்ணல் நிலையம் மற்றும் முடிவுகளை வெளியிடும் நிலையம் என்பவற்றினுள் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் மாத்திரமே உட்பிரவேசித்தல் மற்றும் அவ்விடங்களுக்கு சுடுகலன்களை எடுத்து வரக்கூடாதென்ற விதிகளுக்கு இணங்க செயற்படுதல்.

8. தேர்தலுடன் தொடர்புடைய தடுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈபடுதல் அல்லது தமது ஆதரவாளர்களை அப்பணிகளில் ஈடுபடத் தூண்டுதல், ஆதரவு தெரிவித்தல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

**(இ) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள்** :

1. தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்வந்துள்ள அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என்பன தேர்தல் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சட்டரீதியாகவும் சட்டம், அமைதி என்பன பேணப்படும் விதத்திலும் மேற்கொள்ளல், எதிர்த்தரப்பினர்களின் சட்ட ரீதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காமை மற்றும் சட்டத்திற்கமைய தேர்தல் பிரச்சார அலுவலகங்களைப் பேணுதல்.

2. அச்சிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வாக்காளர்களை அறிவூட்டத்தக்க ஆவணங்களை அச்சிடல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக தேர்தல் சட்டத்துக்கு அமைய நடந்துகொள்ளல் :

   (i) அச்சகரின் /வெளியீட்டாளரின் தகவல்களின்றி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், சட்டவிரோத அறிவித்தல்களை அச்சிடல் போன்ற விடயங்களை தவிர்ந்து கொள்ளல் ;

   (ii) சட்டத்தால் தடுக்கப்பட்டிருந்தால் வேட்பாளர் அல்லது வேட்பாளரின் நெருங்கிய உறவினர் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல் அல்லது வாக்குகளை இரந்து கேட்டல் என்பனவற்றிற்காக வீடுவீடாகச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தலுக்காக வீடுவீடாகச் செல்லும்போது பெருந்தொகை மக்கள் கூட்டம் அல்லது இசை முழக்கம், பதாகைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.

3. தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டு அல்லது வேறொரு தரப்பினரின் தோல்வியை எதிர்பார்த்து எந்தவொரு தேர்தல் பிரச்சார அறிவித்தலையோ, பிரச்சார பலகைகளை அல்லது அதனோடு தொடர்புடைய புகைப்படத்தையோ, சித்திரங்கள் போன்றவற்றையோ அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் அல்லது பிரச்சார கூட்டம் நடைபெறும் தினம் கூட்டம் நடைபெறும் காணியில் தவிர மக்களுக்கு

தெரியக்கூடியவாறு அரசாங்க அல்லது தனியார்துறைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், வதிவிடமொன்றில், வெற்றுக்காணியொன்றில் அல்லது பொதுமக்கள் பிரவேசிப்பதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள பாதைகளில் அல்லது பொது இடங்களில் சட்டவிரோதமாக காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல்.

4. கட்சி/வேட்பாளர் வேறுபாடின்றி சாதாரண நிலைமையின்கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கூட்ட மண்டபங்கள் அல்லது விளையாட்டு மைதானங்கள் தவிர தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களுக்குரித்தான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஆதனமொன்றை அல்லது சேவையொன்றைப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

5. தேர்தல் பிரச்சார/ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக எந்தவொரு சமயத் தலத்தையோ, சமயத் தலமொன்றுக்குரித்தான காணியொன்றையோ, ஆதனமொன்றையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

6. தேர்தலோடு தொடர்புடைய கொடிகள் அல்லது அறிவித்தல்கள் அல்லது ஸ்ரிக்கர்கள் மற்றும் வேட்பாளரின் இலக்கம், பெயர், புகைப்படம் என்பன வேட்பாளர் பயணம் செய்கின்ற வாகனத்தில் மாத்திரம் காட்சிப்படுத்தல் மற்றும் பதிவுசெய்யப்படாத வாகனங்களில் அல்லது கராஜ் இலக்க/போலி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களை தமது சொந்த தேர்தல் பிரச்சாரங்களுக்கு ஈடுபடுத்தாதிருத்தல்.

7. தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற சோடணைகள் அனுமதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரசாரக்கூட்டம் இடம்பெறுகின்ற காணியில் அக்காலப் பகுதிக்குள் மாத்திரம் சூழலை மாசுப்படுத்தாதவாறு மேற்கொள்ளலும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பின்னர் கால தாமதமின்றி அச்சோடணைகளை அகற்ற நடவடிக்கையெடுத்தலும்.

8. தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் பிரச்சார/ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குரிய ஊர்வலங்களை, பொதுமக்கள் ஊர்வலங்களை மற்றும் வாகன ஊர்வலங்களை நடாத்துதல் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களென்பதால் அவ்வாறான ஊர்வலங்கள் பாத யாத்திரைகள், வாகனப் பேரணிகள், துவிச்சக்கர வண்டி ஊர்வலங்கள் போன்ற எவற்றையும் தேர்தல் காலக்கெடுவினுள் நடத்தாதிருத்தல்.

9. ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்ட கூட்டத்திற்காக மாத்திரம் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துதல், கூட்டக்காலத்திற்கும் அக்காணிக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படல், வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒலிபெருக்கியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்தல்.

10. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலத்துக்கு முன்னர் உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த நடவடிக்கையெடுத்தல் மற்றும் அவ்வமைதிக் காலக்கெடுவினுள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாண்மைய ஊக்குவிக்கக்கூடியதாக இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல், அச்சு/ இலத்திரனியல் ஊடகங்களூடாகப் பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளை இடைநிறுத்தல்.

11. எந்தவொரு கட்சியையும் அல்லது சுயேச்சைக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றில் மக்கள் பிதிநிதியொருவராகப் பதவி வகிக்கின்றவர், ஏதேனுமொரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது அவற்றின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்காக தனக்கு பிரதிநிதியொருவர் என்ற வகையில் கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களையும், தத்துவங்களையும், வாகனங்களையும் மற்றும் ஏனைய அரசாங்க வளங்களையும் பயன்படுத்தாமை.

12. பொதுமக்கள் பிரதிநிதியொருவரின் பாதுகாப்புக்காக சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் அல்லது அவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள சுடுகலன்கள் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை குறித்த மக்கள் பிரதிநிதியின் பாதுகாப்புக்காகவன்றி வேறெந்தவொரு சட்டரீதியற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

13. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் சட்டத்தின்கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற வானலைக்கால எல்லை, உரிய கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கமையப் பயன்படுத்தப்படல் (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.)

14. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தலொன்றிபோது வாக்காளர் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செய்தியொன்றை அனுப்புவதற்குள்ள உரிமையை, உரிய சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அஞ்சல்மா அதிபரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய பயன்படுத்துதல் (இவ்வாய்ப்பு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.)

15. க. பொ. த. சாதாரண தரம் அல்லது உயர்தரப் பரீட்சைகள் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை உட்பட முக்கியமான பரீட்சைகள் இடம்பெறும் பாடசாலைகள் மற்றும் அப்பரீட்சைகளின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் பாடசாலைகள், பரீட்சை நிலையங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் அப்பாடசாலைகளின் / நிலையங்களின் சுற்றுப்புறத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல்.

16. எவரேனும் வேட்பாளரொருவரினால் அல்லது வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளர் ஒருவர் தொடர்பாக முன்னர் தெரிவித்த கூற்றொன்றை அல்லது கருத்தொன்றைத் தெரிவிப்பதற்கு வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்காகக பயன்படுத்தல் தொடர்பில் அக்கூற்றை அல்லது கருத்தைத் தெரிவித்த நபர் எதிர்ப்புத் தெரிவிப்பாராயின், அவ்வாறான கூற்றை/கருத்தை பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

**(ஈ) வாக்கெடுப்புத் தினம் :**

1. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் மேற்கொள்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் குறிப்பாக வாக்குகளை இரந்து கேட்டல் போன்ற தேர்தல்கள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை இழைக்காமை.

2. வாக்களிப்புக்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்களுக்கு மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வருகின்ற வாக்காளர்களுக்கு எவ்வித இடையூறையும் ஏற்படுத்தாமையும், வாக்கினைப் பிரயோகிப்பதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தாமையும் வாக்காளர்களுக்கு தமது வாக்கினை சுயாதீனமாகவும்,சுதந்திரமாகவும், அந்தரங்கமாகவும் பிரயோகிப்பதற்குள்ள உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்தாமையும்.

3. தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப்படுதல், உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு இலக்காக்கப்படுதல் அல்லது அவர்களின் ஆதனங்களுக்கு சேதம் விளைவித்தல் என்பவற்றைத் தவிர்ந்து கொள்ளல் மற்றும் வாக்களிக்க வருக்கின்ற அல்லது வாக்களித்து விட்டுச் செல்கின்ற வாக்காளர்களை அச்சுறுத்தல், அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல், வாக்கெடுப்பு நிலைய முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுவதைத் தவிர்த்தல்.

4. வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசிப்பதற்காக அனுமதியுள்ளவர்கள் மாத்திரம் (போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றின் செயலாளர், வேட்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்) உட்பிரவேசிக்க வேண்டுமாதலால் அது தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுதல் மற்றும் தத்தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் அல்லது புகைப்படப்பிடிப்பாளர்களை அழைத்து வராதிருத்தல்.

5. தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தகைய குற்றத்தையும், தேர்தல் ஊழல் நடவடிக்கைகளையும் ஆற்றுவதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும், தவிர்த்தல், (வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப்பெட்டிகளை வலுகட்டாயமாக நிரப்புதல், வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்தல், ஆள்மாறாட்ட வாக்குகளை அடையாளமிடல் போன்ற தவறான ஊழல் நடவடிக்கைகள்).

6. சட்ட ரீதியற்ற முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்யாமலிருக்க வழிவகை செய்தல்.

7. வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பணியாட் குழுவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு ஒத்துழைத்தலும், அவர்களின் பணிகளுக்கு முகவர்கள் இடையூறு ஏற்படுத்தாமைக்கு வழிவகை செய்தலும்.

8. தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரத்தோடு, வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கின்ற முகவர்களுக்கு, கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்களுக்கு தடங்கலேற்படுத்தாமையும் அவர்களின் பணிகளை ஆற்றுவதில் ஒத்துழைப்பு வழங்கலும்.

9. வாக்கெடுப்பு நிலைய வளவினுள் புகைப்படமெடுத்தல், கையடக்க தொலைபேசி பாவனை போன்ற தடை செய்யப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருத்தல்.

மேற்குறித்த விடயங்கள் ஏற்புடையதாகின்றவிடத்து அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் தினத்திற்கும் செல்லுபடியாகுமெனக் கருதுதல் பொருத்தமாகும்.

**(உ) வாக்குகள் மற்றும் விருப்புக்கள் எண்ணல் (அஞ்சல் வாக்குகள் உள்ளிட்ட) மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்:**

1. வாக்குகள் மற்றும் விருப்புக்களை எண்ணல் (அஞ்சல் வாக்கெண்ணல் உள்ளிட்ட) நடைமுறை தொடர்பாக தமது வாக்கெண்ணல் முகவர்களை அறிவூட்டலும் முறைப்பாடுகளை சமர்பபிக்கும் உரிய முறைமை தொடர்பாக தமது முகவர்களை அறிவூட்டலும்.

2. வாக்கெண்ணல் நிலையத்திற்குள்ளேயும் மற்றும் பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்குள்ளேயும் அந்நடவடிக்கைகளை நிர்வகித்தல் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கையெடுத்தல் இன்றியமையாததென தத்தம் முகவர்களை அறிவூட்டல்.

3. வாக்கெண்ணல் முகவர்களாக முறையாக நியமனஞ் செய்யப்படாவிடின் அல்லது வேட்பாளராக இல்லாவிடின் அரசாங்கத்தின் அல்லது மாகாண சபைகளின் அமைச்சர்கள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் அல்லது ஏனைய அரசியல்வாதிகள் வாக்கெண்ணல் நிலையக் கட்டிடத் தொகுதிக்குள்/நிலையத்திற்குள் உட்பிரவேசிக்காதிருக்க வழிவகை செய்தல்.

4. வாக்கெண்ணல் அல்லது முடிவுகளை வெளியிடுதல் மண்டபங்களின் முகவர்களாக வருகை தருகின்ற எந்தவோர் அரசியல்வாதியும் சுடுகலன்கள் அல்லது சுடுகலன்களின்றி பாதுகாவலர்களை அம்மண்டபங்களினுள் அழைத்துச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்கள், முடிவுகளை வெளியிடும் மண்டபத் தொகுதி என்பவற்றினுள் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்து வருவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

**(ஊ) குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகள் அல்லது தேசிய ஐக்கியத்திற்கு எதிரான வெளிப்படுத்துகைகள் :**

1. பெண்கள், விசேடதேவைப்பாடுகளுடன் கூடிய அதாவது அங்கவீனர்கள், வித்தியாசமான பால் ரீதியான தோற்றத்துடன் கூடிய நபர்கள் மற்றும் பிற சமய அல்லது இன குழுமங்கள் என்பவற்றை வேறுபிரித்துக்காட்டி அத்தகைய சனக் குழுமங்களை அல்லது சமூகத்தினரை அச்சுறுத்தத்தக்க அல்லது அசௌகரியத்திற்கு இலக்காக்குகின்ற விதத்திலான குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகளை வெளியிடக்கூடாது.

2. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அனைவரும் குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகையை மேற்கொள்வது எப்பொழுதும் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் முக்கியமாக தேர்தலொன்றின் போது வேட்புமனு காலப்பகுதி ஆரம்பிக்கின்ற முதல் நாள் முதல் அத்தேர்தல் நடாத்தப்படுகின்ற தினத்திற்குப் பின்னர் வருகின்ற உடனடுத்த தினம் வரையிலான காலப்பகுதிக்குள் அவ்வாறு மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகள் குற்றமாக இனங்காணப்பட்டுள்ளமையால் அத்தகைய வெளிப்படுத்துகைகளை வெளியிடுபவர்கள் தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும்.

4. இன மற்றும் சமய குழுக்களிடையே உள்ள நட்புறவிற்கும், பரஸ்பர நம்பிக்கைக்கும் இடையூறு விளைவிக்க கூடியதான எந்தவொரு வெளிப்படுத்துகைகளை மேற்கொள்வதையோ எந்த உருவப்படங்களை காட்சிப்படுத்தலையோ தவிர்ந்து கொள்ளல்.

5. இன அல்லது சமயக் குழுக்களினதும் நபர்களினதும், தனித்துவத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய ஏதேனுமொரு வெளிப்படுத்துகையை வெளியிடுவதை தவிர்ந்து கொள்ள வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளிப்படுத்துகைகளை பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

6. சமய, இன, மொழி, சாதி அல்லது பால் ரீதியான சமூக நிலை தொடர்பான வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து எவரேனுமொருவருக்கோ அல்லது குழுவிற்கோ பாதிப்பை ஏற்படுத்தத்தக்கதாக அல்லது வேறுபாடு காட்டத்தக்கதாக கருத்தில் கொள்ளடப்பட முடிந்த எந்தவொரு வெளிப்படுத்துகையையும் மேற்கொள்வதையோ ஏதேனும் செயற்பாட்டினை நிகழ்த்துவதையோ தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

7. பெண் ஒருவரின் அங்க இலட்சணங்களை அடிப்படையாக வைத்து பெண்களுக்கு ஊறு விளைவிக்கத்தக்க விதத்தில் அல்லது மன உளைச்சலை ஏற்படுத்தத்தக்க விதத்தில் அல்லது கீழ்த்தரமான விதத்தில் வெளிப்படுத்துகையை மேற்கொள்வதை அல்லது ஏதேனும் செயலொன்றை மேற்கொள்வதை தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விடயம் பெண்கள் தொடர்பாக பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அனைத்து பிரசைகளுக்கும் பொருந்தக்கூடியதென்பதால் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

8. எவரேனும் ஒரு நபரின் ஏதேனும் விதத்திலான அங்கவீனம் அல்லது உடலியல் குறைபாடு தொடர்பாக மானபங்கப்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது கீழ்தரமாக மதிப்பீடு செய்யத்தக்க விதத்திலான வெளிப்படுத்துகையொன்றை மேற்கொள்ளலை அல்லது எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளலை தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

**(எ) ஏனைய முக்கிய விடயங்கள் :**

1. தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் தத்தம் கட்சிகளின் கொள்கைகளையும் ஒரு குறித்த காலப்பகுதிக்குள் தமது கட்சியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டமொன்றையும் வாக்காளருக்கு முன்வைத்தல் மற்றும் அதன் பிரதிகளை தேர்தல்கள் ஆணையாளருக்கும் அதன் மூலம் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்தல்.

2. தேர்தல் பிரச்சாரங்கள்/ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் அரசாங்க ஆதனங்கள், உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது அலுவலர்களை ஈடுபடுத்தாமை மற்றும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற எந்தவொரு நிறுவனத்தினுள்ளும் அல்லது அவ்வளவிற்குள் வாக்குகளை இரந்து கேட்டல், துண்டுப் பிரசுர விநியோகம், பதாகைகளைக் காட்சிப்படுத்தல் அல்லது அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல் போன்ற பிரச்சாரங்களை மேற்கொள்ளாதிருத்தல்.

3. மக்கள் பிரதிநிதிகள் தமது உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளூடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதைத் தவிர்ந்து கொள்ளல்.

4. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகக் கட்டணமின்றி அரசாங்க உலங்கு வானூர்திகளையோ அல்லது வேறு வாகனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

5. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பொதுக்கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், அரசாங்க, சுற்றுலா விடுதிகள் என்பன பயன்படுத்தப்படுமாயின் உரிய கொடுப்பனவுகளை வழங்கி அவற்றைப் பயன்படுத்தலும் மற்றும் அத்தகைய வளங்களை அதேமுறையில் அனைத்துத் தேவையான தரப்பினராலும் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு நடவடிக்கையெடுத்தலும்.

6. தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகளையும், கடிதங்களையும் மற்றும் அறிவித்தல்கள் அனுபந்தங்கள் போன்றவற்றையும் அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செலவில் பிரசுரிக்காமை.

7. தேர்தல் காலப்பகுதிக்குள் வாக்காளர்களை அல்லது அரச அலுவலர்களைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அழைத்து உபசரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளல்.

8. ஏதேனுமொரு விதத்தில் நிதி ஏற்பாடுகளை வழங்கல் அல்லது வாக்குறுதிகளையளித்தல், கருத்திட்டங்கள் அல்லது திட்டங்கள் என்பவற்றிற்காக அடிக்கல் நாட்டல், பாதைகள், நீர், மின்சாரம் ஆகிய வசதிகளை வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளையளித்தல் மற்றும் தமது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுத்தத்தக்கவாறு வளைத்துப் பிடித்துக்கொள்ள முடிந்த வாக்காளர்களுக்காக முறையற்ற விதத்தில் மிகத்துரித கதியில் அரசாங்கத் துறையின் பதவிகள் மற்றும் நியமனங்கள் என்பவற்றை வழங்குவதைத் தவிர்த்தல்.

9. தேர்தல் சட்ட மீறல்கள், தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், தேர்தல் மோசடிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துகின்ற துறைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளில் தலையிடாமையும் அத்துறைகளுக்கு சுயாதீனமாக நடந்து கொள்ளத் தேவையான பின்னணியை உருவாக்கலும்.

10. தேர்தல் காலப்பகுதிக்குள் எதிர்த்தரப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக உறுதிப்படுத்த முடியாத தவறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அவற்றிற்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக்கூட வழங்காமல் நிகழ்ச்சித் திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தாமை.

11. அரசியல் கட்சியொன்று அல்லது அரசியல்வாதிகள் தொடர்பாக செய்யப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதில் எந்த வித்திலான தேர்தல் பிரச்சாரங்களையும் (நம்ப முடியாத தேர்தல் ஊக்குவிப்புத் தகவல்களை பிரச்சாரம் செய்வதை) தவிர்ந்து கொள்வதோடு, வன்முறைத்தன்மையற்ற சட்டரீதியான செயற்பாடுகளை மாத்திரம் பின்பற்றல்.

12. மக்கள் பிரதிநிதிகளின் சட்டரீதியான மெய்ப்பாதுகாவல்களாகக் கடமையாற்றுகின்ற பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புத்துறை அதிகாரிகளை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அரசியல், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதையும் எதிர்க்கட்சியினரின் தேர்தல் செயன்முறைகளைச் செயலிழக்கச் செய்வதையும் தவிர்ந்து கொள்ளல், அவ்வாறான செயற்பாடுகளை பகிரங்கமாகக் கண்டித்தல்.

13. எந்தவோர் அரசியல் கட்சியோ அல்லது அரசியல் அமைப்போ தமது தேர்தல் நடவடிக்கைகளில் சட்டரீதியற்ற விதத்தில் ஆயுதந் தாங்கிய நபர்களை ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்குமாயின், அத்தகைய செயற்பாடுகளைப் பகிரங்கமாகக் கண்டிப்பதும் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக உரிய தரப்பினருக்கும் அறிவித்தலும்.

14. தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற அரச வைபவங்களின் போது வேட்பாளர்களை அல்லது அரசியற் கட்சிகளின் முதன்மை செயற்பாட்டாளர்களை பங்குகொள்ள செய்யாதிருத்தல் மற்றும் அவ்வாறான வைபவங்களை கட்சி/வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு பயன்படுத்தாதிருத்தல்.

15. அரசியல் ரீதியான நியமனங்களை வழங்குதல் மற்றும் பதவியுயர்வு அல்லது இடமாற்றம் செய்தல் என்பனவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

16. தேர்தல் நடாத்தப்படுகின்ற ஒரு பிரதேசத்தில் அரசாங்கத்தின் ஆதரவில் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்படுமாயின் அச்சந்தர்ப்பங்களை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினதும் கட்சிகளினதும் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது தேர்தல் பிரசாரங்களோடு தொடர்புபடுத்துவதற்கோ நடவடிக்கையெடுக்காமை.

17. பகிரங்க பரீட்சைகள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு ஏற்புடையதாக நடாத்தப்படுகின்ற கல்விச் செயலமர்வுகள் ஊடாக கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பை மேற்கொள்ளாதிருத்தல்.

**வேறு விடயங்கள் :**

1. தேசிய கீதம், தேசியக் கொடி, சமயச் சின்னம், சமயக் கொடிகள், சமயக் குரவர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் வரைபடங்கள் அல்லது உருவப்படங்கள் போன்ற எவற்றையும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புறச் செய்வதற்காக பயன்படுத்தல் கூடாது.

2. மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கட்சி/குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக் கூட்டங்கள் ஆகியவற்றில் அல்லது அறிவித்தல், பிரச்சாரப் பலகை என்பனவற்றில் காட்சிப்படுத்தல் கூடாது. மேலும் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்புக்காக எந்தவொரு அரச அலுவலரினதும் உருவப்படத்தை அல்லது வரைபடத்தை எவ்விதத்திலும் பயன்படுத்தக் கூடாது.

3. அரசியற் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார அலுவல்களுக்காக பொதுவாக பெற்றுக்கொடுக்கப்படுகின்ற அரசாங்க இடங்கள் ஒரு கட்சியின் அல்லது ஒரு வேட்பாளரின் பிரச்சார அலுவல்களுக்காக மாத்திரம் குறித்தொதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கக் கூடாதென்பதோடு, வேறு கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளர்களின் பிரச்சார அலுவல்களுக்காகவும் அவ்வாறான இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம சந்தர்ப்பம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய விளையாட்டு மைதானங்களை அல்லது மண்டப வசதிகளைக் குறித்தொதுக்கும்போது ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைத்துக்கொள்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பேணப்பட்டு வருகின்ற மாவட்டக் குழுவின் உத்தரவுகளுக்கமைய செயற்படுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

5. எந்தவோர் சமயக் கூட்டத்திலும் ஏதேனும் தேர்தல் முடிவில் அழுத்தத்தை ஏற்படுத்தும் விதத்திலோ அல்லது அத்தேர்தலில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதற்கோ அல்லது வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்துக கொள்வதற்கோ வாக்காளரைத் தூண்டக்கூடிய விதத்திலான எவ்வித வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளக் கூடாது.

6. ஏதேனுமொரு தேர்தலில் எந்தவோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவரது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக ஏதேனுமொரு சமயத்தலத்தில் எவையேனும் துண்டுப்பிரசுரங்கள், பிரச்சாரப் பலகைகள், சுவரொட்டிகள், சித்திரங்கள், அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், சின்னங்கள், குறியீடுகள், கொடிகள், பதாகைகள் என்பவற்றை பகிர்ந்தளித்தலோ காட்சிப்படுத்தலோ அல்லது எந்தவொரு பொது மக்கள் கூட்டத்தையும் நடாத்துதலோ மேற்கொள்ளக்கூடாது.

7. சமயப் பணித்துறை அமைப்பொன்றின் அங்கத்தவர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் என்ற வகையில் எவரேனும் வேட்பாளருக்கு வாக்கினை வழங்குமாறு அல்லது வாக்களிப்பதைத் தவிர்ந்து கொள்ளுமாறு தூண்டுதல் அல்லது பலவந்தப்படுத்துவதற்காக குறித்த வேட்பாளர் ஒருவருக்கு வாக்கினை அளிக்குமாறு –

(i) தமது சமயப் பணித்துறை அமைப்பின் அல்லது ஒழுங்கமைப்பின் எவரேனும் அங்கத்தவருக்கு அல்லது பற்றாளர் ஒருவருக்கு அல்லது அவ்வங்கத்தவரின் அல்லது பற்றாளரின் குடும்பத்தின் எவரேனும் உறுப்பினருக்கு எவ்விதத்திலான ஆத்மீக தொண்டினை அல்லது சேவையினை அல்லது நலனுதவியை மறுத்தல் அல்லது அளிக்க மறுப்பதாக பயமுறுத்துதல் ;

(ii) தமது சமயப் பணித்துறை அமைப்பிலிருந்து அல்லது ஒழுங்கமைப்பிலிருந்து அத்தகைய உறுப்பினர் ஒருவரை அல்லது பற்றாளர் ஒருவரை விலக்குதல் அல்லது விலக்குவதாக பயமுறுத்துதல் கூடாது.

8. எவரேனுமொரு வேற்று நபரின் தொழில் தருநர் என்ற வகையில் தனது ஊழியரை ஏதேனுமொரு விதத்தில் வாக்களிக்குமாறு பலவந்தப்படுத்துதல் அல்லது ஏதேனுமொரு விதத்தில் வாக்கினை அளிப்பதற்காக தண்டனை வழங்கும் நோக்கில் –

(i) அத்தகைய தொழிலை முடிவுறுத்துகின்ற அல்லது முடிவுறுத்தப்போவதாக பயமுறுத்துகின்ற,

(ii) அத்தகைய தொழில் போக்கில் சாதாரணமாக அவ்வேற்று ஆள் ஏற்கனவே அனுபவித்த நலனுதவியை அல்லது சேவையை அளிக்க மறுத்தல் அல்லது அளிக்க மறுக்கப்போவதாக கூறுதல் ஆகாது.

எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு இசைவாக செயற்படுவார்களென எதிர்பார்க்கப்படுவதோடு, இவ்வொழுக்க நெறிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தமது முகவர்கள், கட்சிக்காரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பின்பற்றுகிறார்களென திருப்தியடையக்கூடிய விதத்திலான பொறிமுறையொன்று வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து கட்சிச் செயலாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படுமென மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2018, சனவரி 05.

02-139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.